செ. வெ.எண்.563 நாள்:06.07.2010

# தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்

## முதல் ஆலோசனைக் குழுக் கூட்டம்

## செய்திக் குறிப்பு

தமிழ்நாட்டிலுள்ள நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் முதலாவது ஆலோசனைக் குழுக் கூட்டம் 6.7.2010 அன்று மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு. சுரேஷ்ராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையின் செயலர் திரு.வெ. இறையன்பு இ.ஆ.ப., அவர்களும் கலைப் பண்பாட்டு ஆணையர் திரு ப.அ. மணி, இ.வ.ப., அவர்களும் திரு.அ. தானியேல் பிரேம்நாத் வாரிய செயலரான அரசு இணை செயலரும், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர். ராஜா உட்பட இதர உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. நாட்டுப்புறக் கலைஞர்கள் வாரியத்தில் 60 வயதை கடந்தவர்களும் உறுப்பினராக சேரலாம் என்பது பற்றியும் அவ்வகையில் கலைஞர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்குவது குறித்தும் நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் பரிந்துரைக்கும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வழங்கும் நலிந்த கலைஞர்கள் நிதியுதவி திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தில் சேர்ப்பது குறித்தும் மேலும் மற்ற வாரியங்களில் வழங்கப்படும் நிதியுதவிக்கு ஈடாக இவ்வாரியத்திலும் நிதியுதவியினை உயர்த்துவது குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

**<u>வெளியீடு:</u>**

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9